Tit-Bits of Animal Life.

V22. No. 2. May 1922.

TL
KZ.m211,N01TB
N22.22.2;1
197921

1107

Vol. XXII    May, 1922    [No. 2

Society for the . . .
Prevention of Cruelty .
to Animals, Madras .

8-SEP 1922

ENGLISH & TAMIL

# TIT-BITS OF ANIMAL LIFE

*Copies can be had on application to the Honorary Secretary, S.P.C.A., Vepery, Madras.*

**Annual Subscription, Half a Rupee, payable in advance.**



EDITED BY

K. CHENGALVARAYA AYYAR, B.A., B.L.,

*Member of the S.P.C.A.*

சென்னை: ஜீ. ஓபி. ஸி. சங்கத்தின் மெம்பராகிய

கே. செங்கல்வறய அய்யர், பி.ஏ., பி.எல். அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

PUBLISHED QUARTERLY.

A QUARTERLY JOURNAL—Vol. XXII.—Number 2.

May, 1922-௵ மேமீ

CONTENTS

In English


| | PAGE |
|---|---|
| Performing Animals ... ... | 9 |
| Animal Sacrifice ... ... | 10 |
| Close Slaughter-Houses! (Hells Upon Earth!) ... ... | ,, |


அட்டவணை

தமிழில்


| | பக்கம் |
|---|---|
| தவளைகள் .... .... .... .... | 11 |
| வர்த்தமானக் குறிப்புகள் .. .... | 14 |



# TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸார

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XXII.] MAY, 1922-௵ மேமீ. [இலக்கம் 2.



8-SEP 1922


## Performing Animals

### TRAINING OF WILD BEASTS

#### SAVAGERY OF CIVILIZATION

'A man who watched a trainer with his iron hook (thrust into the tenderest parts of the hide) teach an elephant to lie down exclaimed: 'Why do you do that?' 'To make him lie down' was the reply. 'But it's brutal.' 'Well, ain't he a brute?' 'I know,' persisted the man; 'But you should do it some other way.' 'Mister,' said the trainer, in a tone of finality, 'there ain't any other way. You can't break animals with a feather duster.'—M. B. Kirby, 'The Gentle Art of Training Wild Beasts.'

The House of Commons Committee of Inquiry into the treatment of animals trained to perform resumed its sittings recently, and it is time that a normal public opinion should make up its mind between that powerful trade union, the Variety Artists' Federation, who are defending the interests of the animal trainers, championed (not we hope, with full knowledge of the character of this industry) by a Labour M. P., and the 'cranks and faddists, he and they attempt to deride out of their crusade.

The evidence collected is derived from two main sources—convictions in the Courts (obtained for obvious reasons, with the utmost difficulty) and sworn statements and affidavits by eye-witnesses. What (reserving comment) are these statements to the truth of which witnesses swear a legal oath, in many cases at the risk of losing their employment and in one of personal danger? The following represent a minute percentage of the whole. A showman was convicted for keeping a bear in a cage 'only big enough for a terrier,' and another for goading with a spike and dosing with whisky a sick elephant which fell down twice before performance and subsequently died. Another was convicted for piercing a dromedary until the blood ran down its legs, and for whipping a bull covered with scalds and sores. Bears have been taught to dance by keeping them on a sheet of hot iron while music was played. Another trainer was convicted for spiking and hooking the elephants under the tail and behind the ears until the blood poured down, and another witness testified on oath to seeing elephants driven to the top of a chute by hot irons. A trainer was seen to thrust a prolonged pole repeatedly into a lion's open mouth which was 'a mass of sores'. Trainers have been prosecuted for jabbing broken lions about the eyes, nose and mouth to make them into 'wild-beasts of the forest,' in other words to pander to the depraved appetites of the Roman arena hungry audience. A trainer was seen to train his bear by hitting it continually across the snout with a log of wood. He told the witness it was necessary to keep this up daily for six months until the bear 'knew his master'. Another witness swore to a lion being kept five days without food or drink between the trainings with trident and whip. A trainer was convicted for keeping his bears under the stage all day long in boxes in which they could not stand upright nor move from side to side. They were never released from them except to come on the stage. A trainer told a witness that he hung up his dog every day by the hind legs from a trapeze to teach him a balancing trick. Another witness declared on oath that she saw a dog trained to stand on its fore-paws by being beaten with a thin wire rod on the belly. A trainer was seen by a witness to begin savagely beating his baboon for no obvious cause. When questioned, he said it was to 'keep him

under'. Another trainer was convicted for thrusting a stick into a bear's nostrils for 'discipline'. The cases of merciless and gratuitous flogging for the same reason are endless. Thus do men become worse than wild beasts in order to teach beasts to parody the more inept actions of men.

*(Continuation will follow.)*

## Animal Sacrifice

THE HUMANITARIAN SABHA, TRAVANCORE

K. S. N. for Secretary writes:—

Besides stopping animal sacrifice in more than fifteen temples, the Humanitarian Sabha has worked, since its mission to Mundai Kaud, a revolution in the minds and conditions of the pilgrims. Poor as the immediate physical effect of the work might seem, there is no denying the fact that there has been created an atmosphere of considerable moral elevation. Thousands have gone home thinking and feeling that animal sacrifice is really a sacrilege. Many have taken back their live sheep and fowls after offering them to the Goddess. Many more have resolved not to resort to animal slaughter next year. Last week at Melancode, near Padmanabhapuram, another centre for such inhuman butchery, hundreds of those that we saw at Mundai Kaud were also found, but unaccompanied by animals. They readily recognized our work, received us with joy and realized a feeling of brotherhood in us, they volunteered to distribute our leaflets and persuaded others to stop the sacrificial form of worship. The members of the mission at Melancode consisted of Messrs. K. Sivathanu Pillai, N. B. Parameswara Iyer, P. T. Subramania Pillay, and the Secretary. Four stirring lectures against animal sacrifice were delivered to the huge gathering in front of the Kumaracoil about a mile from Melancode. Thousands of leaflets were also distributed among them before the party returned at 10 P.M. The Society did its propaganda work at Vellayani, a place five miles from Trivandrum. There, Messrs. Sivathanu Pillai, M. N. Pillay, B Nanoo Pillay and the Secretary addressed the people. I am glad to note that no animal was killed on Saturday last. (One from among the audience and on their behalf stood up and said that they would stop it.) Numerous invitations are coming in asking us to go to different parts of the country. Hence the work that lies before us is heavy and very difficult. And to add to these difficulties in all our work, one important obstacle is the fact that the Government themselves in ignorant sympathy with the sacrificers are the abettors: for, in most of the temples, Government have to supply their share of animals for sacrifices at their own cost. The first query therefore from the devotees is why not Government stop the evil first? They are certainly justified in asking the question. 'Charity is our household divinity' is the sacred motto of this sacred land dedicated to Sri Padmanabha as whose agent, His Highness our Gracious Maharaja rules over the destinies of his subject population. His Highness's Government who had the courage to introduce reforms in the Devaswom and Brahmaswom departments would not find it difficult to introduce this small reform by withholding their share. I earnestly request the Government to see that allotment therefor may be profitably turned towards other forms of 'Naivedyams,' such as milk-porridge, vadais, valsans, etc., and of Poojas like Abhishekams with cow's milk, honey, tender cocoanut water, etc. If Government and the other owners of temples firmly resolve to auction the flesh, skin, etc., of the sacrificed animal and appropriate their sale proceeds towards the temple funds this pernicious custom will automatically cease, as it would be the case if the deity were to swallow herself the things intended for her. I earnestly appeal to His Highness's Government to take prompt and immediate measures in this direction, so that anything done now will facilitate the work of the Sabha which has to struggle against superstition, ignorance, prejudice, antipathy and apathy.

This small reform, if introduced, will draw forth the priceless blessings of the Devas in the shape of peace, prosperity and happiness to the millions of His Highness's subjects and to the Royal House of Travancore.

## Close Slaughter-Houses ! (Hells Upon Earth !)

DEATHS FROM MEAT POISON !

1. *India.*—Five persons suddenly died in Bombay after eating beef.—*Bombay Chronicle*, June 5, 1919.

'The alarming increase of cases of sprue **(at Igatpuri)** is quite probably due to the **abominable quality of our meat**.'—*Times of India*, July 11, 1921.

2. *England.*—'The amount of human suffering which is caused by eating poisoned



or diseased meat is positively distressing. Almost every day one reads in the papers of sickness and death resulting from this unhealthy habit.'

'When will the public apprehend the significance of the fact that it is the practice, **all over this country**, to send animals that **are afflicted with disease**, to the butcher to save them from dying of their maladies?'—*Herald of the Golden Age*, London, December, 1903.

3. *America.*—'There were in the United States last year about 1,300 cases of acute ptomaine poisoning. Nearly all were due to the **use of meats**. Fully 3,000 of these died within twenty-four hours after the ingestion of the poison. But while one dies of acute ptomaine poisoning, a thousand die of chronic ptomaine poisoning.

Another reason why it is wise to dispense with meat as an article of food is because of the prevailing **diseases among animals**. It is safe to say **one-half of the meat** that is sold in our markets is derived from animals that are more or less affected with some disease.

The meat-eater is much more apt to **die of germ diseases** than the abstainer from meats.'—**Dr. D. H. Kress, M.D.** (*Signs of the Times*, October, 1918, Journal of the International Tract Society, Lucknow.)

4. *Diseases from Flesh-eating.*—'There is clear evidence in medical practice of the part played by meat in causing **Dyspepsia, Enteritis** and **Appendicitis**; in favouring the outbreak of **Typhoid** and **Dysentery**; in forming the rallying ground for the germs of **Tuberculosis** and Cancer.'—*Some Popular Foodstuffs Exposed*, by **Dr. Paul Carton.**

5. *What to do.*—**If butchers were to kill healthy animals only,** they would have to suffer the loss of many thousands of pounds, they would be ruined and **their families would have to starve. So they will always kill** as many diseased animals as possible for human food. The *only* remedy against the evil is that instead of expecting either the Butchers or the Meat Inspectors **to become Angels,** prudent and life-loving flesh-eaters should resolve to become vegetarians, thereby saving themselves and their dear ones from **the risk of some day suddenly falling victims to some deadly disease** such as **cholera or consumption.**

6. *Greatest Curse for Mankind.*—It has become a fashion in the world to prohibit **Drink** by-law. But a study of the subject will convince anybody that **flesh-eating is the greatest curse for mankind.**

7. *A prayer.*—I pray that the world's rulers may kindly close slaughter-houses (Hells Upon Earth) in their countries, and thereby earn the very great blessing of saving many human beings from **sudden death**, and many more from consumption, cholera, cancer and other **deadly diseases**

8. *Literature.*—Vegetarian literature may be had from the Secretaries of (1) The Bombay Humanitarian League, 309, Shroff Bazaar, Bombay, and (2) The Vegetarian Society, Manchester, England.

LABHSHANKAR LAXMIDAS

## தவளைகள்

கல்லினுள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் என்று ஔவை கூறிய கூற்று கவனிக்கத்தக்கது. தவளைகள் தேரைகள் என்று மண்டூகங்கள் இருபிரிவு பட்டன. தவளைகள் தேகம் பெருத்தவை. தேரைகள் தேகஞ் சிறுத்தவை. கல்லினுள் தேரை வசிப்பதைப்பார்த்து ஈசுவரனின் சிருஷ்டியின் பெருமையை ஒருவாறு அறியலாகும். கற்களுக்கிடையில்தேரைகள் வசிப்பதைப்பற்றிச் சாஸ்திரக்ஞர்கள் கூறும் அபிப்பிராயம் கவனிக்கப்படவேண்டும். பாம்பினத்திற்கும் மீனினத்திற்கும், மத்திய ஜாதியென்று மண்டூக வகுப்பைக் கூறலாம். துருவப் பிராந்தியங்களைத் தவிர உலகத்தின் எல்லா ஸ்தலங்களிலும் தவளைகளைக் காணலாம். மிகுந்த உஷ்ணப் பிரதேசங்களிலும், மித சீதோஷ்ணப் பிரதேசங்களிலும் தவளைகள் ஏராளமாய்ப் பிறந்து பெருகி வாழ்கின்றதை நாம் நாளும் பார்க்கிறோம். கடலிலேயே இவைகள் மிகுதியும் வாழப் பழக்கப்பட்டிருக்கவில்லை. இன்னும் கடல் பிராந்தியங்களில நீந்தி விளையாடி உயிர்வாழுவதிலும் இப்பிராணிகள் பிரியப்படுவதில்லை. ஆதலின் கடலிலும், அதன் பக்கத்துள்ள சிறு கழிமுகங்களிலும் இவை தம் வாசஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டு உயிர்வாழ்கின்றன.

சில வேளைகளில், கடல் மத்தியத்திலும் போய் வழக்கமிராத தவளைகள், கடல் நடுவிலுள்ள தீவுகளில் காணக் கிடைக்கின்றன. இவைகள் அங்குவந்தவித மென்னவென்னில் கடல்வாழ் பறவைகள் கழிமுகத்தில் காணப்

படும். தவளை முட்டைகளை கண்காணாத் தீவுகளில் கொண்டுபோய் இட்டிருந்ததினால், இவைகள் அங்கு முட்டையிலிருந்து உற்பத்தியாயிருக்கவேண்டும் என்று ஊகித்தறியவேண்டியிருக்கிறது. பாலைவனப் பிராந்தியங்களில் பல வேளைகளில் தவளைகளைக்காண்ப தரிதாயுமிருக்கிறது. நீண்டகாலம் உஷ்ணமாயிருந்து பின்னர் மழை பெய்யும் வழக்கமுள்ள பிரதேசங்களிலுள்ள தவளைகள் பெரும்பாலும், தம்மிருப்பிடங்களைவிட்டு மரங்களின் சந்து பொந்துகளில் போய் உஷ்ணம் தாங்கமாட்டாது கண்மூடித் தவமிருக்கின்றன. இப்படி இத்தவளைகள் ஐந்தாறுமாத காலங்களில் யாதொரு ஆகாரமில்லாமலும் தண்ணீர் அருந்தாமலும் காலந்தள்ளுகின்றன. அவை மறுபடியும் அத்தேசத்தில் மழைபெய்து பூமி செழித்தபோது தம் ஒளிவிடங்களைவிட்டு யதாஸ்தானம் போய்ச் சுகஜீவனம் செய்கின்றன. ஜாவா தேசத்திலுள்ள தவளைகளில் சிலஜாதி உஷ்ணகாலத்தில் சுமார் 5 மாதகாலவளவு இம்மாதிரிக் கண்மூடி ஆகாரமில்லாமல் மரப்பொந்துகளில் காலந்தள்ளுவதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

தவளைகள் மொத்தத்தில் தென் அமெரிக்காவிலும், இந்தியாவிலும் ஏராளமாய் வாசம் செய்கின்றன. இவைகள் உஷ்ணகாலங்களில் வறண்ட குளம் குட்டைகளைவிட்டுப் போய்ப் படுக்குங்காலங்களில் அவற்றிற்கு மூச்சு இருக்கிறதோ இல்லையோ என்று சந்தேகப்படும்படியாயிருக்கிறது. ஆனால் ஆகாரபலமும் புஷ்டியும் கொண்ட தவளைகள் தாம் ஆகாரமில்லாமலும் மூச்சுக் காட்டாமலும் இந்த ஐந்துமாச காலத்தை எளிதாய்த் தள்ளுகின்றன. மற்றவை தாம்போன இடத்தில் உருத்தெரியாமலிருந்து இறந்துவிடுகின்றன.

வெயிற்காலம்போய் மாரிகாலம் வந்ததும், மறைந்திருந்த தவளைகள் தாம் முன்னர் கூடியிருந்த குளத்தின் அதேபாகத்தில் மறுபடியும் கூடிக் குலாவித் தண்ணீரில் வசிக்கின்றன. தவளைகளிற் பெண்ணினங்கள் அப்போது தண்ணீரின் ஓர் ஓரத்தில் முட்டைகளையிடுகின்றன. அம்முட்டைகள் அப்போது கருநிறமானதாய் $1\frac{1}{2}$ அங்குல நீளமாய்ப் பருத்திருக்கின்றன. அம்முட்டைகளின் தொகுதி ரப்பரைப்போல் இழுத்தால் நீளக்கூடியதாயும், பிசின்போல் ஒட்டிக்கொள்ளும் தன்மையதாயும் இருக்கின்றது. இப்பிசின்போன்ற தன்மை அம்முட்டைகளை தொகுதியைச் சேர்த்துவைத்து, அத்தொகுதிகளுள் ஜலத்தைப் பிரவேசிக்கச் செய்கிறது. அப்படி அதில் ஜலம் சேர்ந்து முட்டைகளுக்குத் தேவையான பிராணவாயுவைத் தந்து சீக்கிரம் அவை பொரிந்து குஞ்சாகும்படியான ஏதுவைத் தருவதாயிருக்கிறது. இந்த பிராணவாயு அம்முட்டைத் தொகுதியில் அடிக்கடி இப்பிசினின் உதவியினால் சேர்க்கப்படாவிட்டால் இம்முட்டைகள் சரியான காலத்தில் பொரிந்து குஞ்சுகளாக மாறுவதற்கு இடையூறுண்டாகும்.

இம் முட்டைகளின் தொகுதியின்மேல், ஒட்டிக்கொள்ளும்படியான தன்மையான மேற்கூறிய பசையில்லாதுபோல், நீர்வாழும் பிராணிகளாகிய மீன்களும், பக்ஷிகளும் இம்முட்டைகளை எளிதில் தம்மாகாரமாக்கிக் கொள்ளும். இம்முட்டைகள் தண்ணீரில் மிகவும் ஆழமில்லாத இடங்களில் மிதக்குமாறு இடப்படுகின்றன. அங்கு அரை அங்குல ஆழத்தில்தான் முட்டைகள் மிதந்து நிற்கின்றன. அங்கு சூரியனின் தேவையான உஷ்ணம் அம்முட்டைகளின்மேல் உறைக்க, அவை பொரிந்து குஞ்சாகின்றன.

முட்டைகள் இடப்பட்ட பத்தாவது அல்லது பதினோராவது நாளில் கரிய நிறமுள்ள முட்டைத் தொகுதிகளிலிருந்து சிறு சிறு பிராணிகள் பிரிந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. இந்த ஜந்துக்கள் ஜலத்தில் தனித்தனி வெளிப்பட்டு விருத்தியாக ஆக, அப்பிராணிகளின்மேல் ஏற்கனவே திரவரூபமான பசையும் அற்றுப்போகின்றன. அப்படிப்போகவே, முட்டைத் தொகுதியினின்று ஒவ்வொரு பிராணியும் இலேசாய் வெளிப்பட்டு ஜலத்தில் பிரிந்துவிடுகின்றன.

இப்படி முட்டைகளினின்று வெளிப்பட்ட தவளைக்குஞ்சு பார்ப்பதற்கு விசித்திரமாய் கரிய நிறமுள்ள தலையுடனும் சிறுவாலுடனும் ஜலத்தில் மிதப்பது கண்கவரத் தக்கதாயிருக்கும். அப்படி மிதக்கும் தருவாயில் மேற்கூறிய தலை வால்கள் தவிர வேறெந்த அவயவமும் அவற்றிற்கு இராது. அது இருக்கும் அந்த நிலையில் அதன் தலையிலுள்ள ஒருவகைப் பொருளின் உதவியினால் அப்பிராணிகள் மற்று எப்பொருளின்மேல்



படினும், அவற்றில் ஒட்டிக்கொள்ளுகின்றன. இப்பிராணிகளுக்கு இந்த விதமான நிலையில் வாய் என்ற அவயவம் ஒன்று இருப்பதாகத் தெரிவதில்லை. இப்படி மிதக்கும் பிராணி இந்த நிலையில் தண்ணீரில் தலைகீழும் மேலுமாகப் புரளுமே தவிர வேறெங்கும் ஓடியாடி விளையாடாது. இந்த நிலையில் இப்பிராணிகளின் தலைகளில் காதுகள்போன்று வெளிப்பட்டிருக்கும் ஒருவகைக் கருவியினுதவியினால், இப்பிராணி உச்சுவாஸ நிச்சுவாஸம் கொள்ளும்.

மற்றும் சில நாட்களில் இப்பிராணிகளின் காதுகள் போன்ற கருவியில் இறக்கைகள் மாதிரியொன்று முளைக்கின்றன. அவற்றின் உதவியினால், தவளைகள் ஜலத்தில் அங்குமிங்கும் நீந்த ஆரம்பிக்கின்றன. மற்றும் சில நாட்களில் இந்தக் காதுகள் மறைய, அவற்றின் மேல்தோல் வளருகின்றது. அப்போது அச்சிறிய காதுகள் மறைந்து விடுகின்றன. பின்பு கொம்பு மூக்குபோன்ற வாய், அப்பிராணிக்கு உண்டாக ஆரம்பிக்கிறது.

இப்பிராணிகள் புதிதாக உண்டான வாயால் சிறிது சிறிதாகத் தண்ணீர் குடித்து, மறைவாயிருக்கும் காதுகளின் வழியாய் இப்போது மூச்சுவிடுகிறது. இப்போதுதான் தவளைகளுக்கு நாக்குகளும் உண்டாக ஆரம்பிக்கிறது. அப்போது இப்பிராணிகள் நீர்க்கரைக்கு அடிக்கடிவந்து தம்முடைய புதிய சக்தியை உபயோகிக்க ஆரம்பிக்கின்றன. இப்படித் தவளைகள் வேறு சக்தியை உபயோகிக்கையில், நாளாக ஆக, தவளைகளின் காதுகள் போன்ற உறுப்பு உபயோகமற்றனவாகிவிடுகின்றன. அப்போது தவளைகளின் நாக்குகள் முன்னுக்கு வந்து விளங்குகின்றன. ஆகவே, இப்பிராணிகள் தவளைகளாக மாறும்போது, காதுகள்போன்ற உறுப்புகள் இருந்த இடம் தெரியாது மறைந்து விடுகின்றன.

இந்த நிலையில் தவளைகள் தம்மார்பை அகட்டிக்கொண்டு மூச்சுவிடச் சரிப்படுவதில்லை. ஆகவே, தவளைகள் காற்றைத் தாராளமாய் உட்கொண்டு வாயை மூடிக்கொள்ளுகின்றன. தவளைகளின் வாயை மட்டும் பலவந்தப்படுத்திச் சிறிதுநேரம் திறந்தபடியே வைத்திருந்தால், மூச்சு விடுவதற்கு இப்பிராணிகளுக்கு முடியாதாகையால், இவை உடனே இறந்துபட நேரிடும்.

இச்சமயத்தில் குளத்தின் ஒரு பாகத்தில் இருக்கும் முட்டைகள், தொகுதியினின்றும் வேறுபடுகின்றன. அப்போது இவை கருநிறமுள்ளனவா யிருக்கின்றன. அங்குமிங்கும் அசைந்துகொண்டு முட்டைகளினின்றும் வெளிப்படும் பிராணிகள், குளத்தைச் சுத்தம் செய்யும் தோட்டிபோல் காரியங்கள் செய்கின்றன. இச்சிறு பிராணிகள் இப்போது மிகவும் பசித்தனவாகையால், அவை தம்மெதிரே குளத்தில் காணும் அசுத்தங்களையெல்லாம் தின்று வயிற்றை நிரப்பிக்கொள்ளுகின்றன. குளத்தில் அழுகிக்கிடக்கும் புல்பூண்டு வர்க்கங்கள் பிராணி வர்க்கங்களையெல்லாம் இப்பிராணிகள் பக்ஷிக்கின்றன. இன்னும் குளத்தில் கிடந்து குளத்தை அழியச்செய்யும் எந்த வஸ்துவையும் இப்பிராணிகள் தின்று குளத்தைச் சுத்தமாக்கி விடுகின்றன. இச்சமயத்தில் குளத்தில் வரும் மாம்ஸப் பிரியமுள்ள பக்ஷிகளும், பெரிய மீன்களும் இந்தப் பிராணிகளை தம்மிரையாகவும் ஆக்கிக்கொள்ளுகின்றன. இன்னும் மீன் இனத்தைச் சேராது தண்ணீரில் வாழும் மற்றும் பலவித பிராணிகளும் இந்த இனத்தைத் தம்மிரையாக்கிக்கொள்ள நேரிடுவதுமுண்டு.

இச்சிறு தவளைகளின் மேலிருக்கும் காதுகள் மறைய ஆரம்பிக்கவே, இத்தவளைகளின் தேக வர்ணமும் மாறுதலடையலாகின்றது. ஒருபொழுதும் இல்லாத தங்க நிறப் புள்ளிகள் இத்தவளைகளின் தேகத்தில் உண்டாகிக் காலம் ஆக ஆக, இப்புள்ளிகளும் மாறிச் சில நாட்களில் தவளைகளின் தேகம் கபில நிறத்தை யடைகின்றது. இந்நிறத்தினால், தவளைகள் மண்ணினடியில் கிடக்கும் காலத்தில் சிரமமடையாமலிருக்கின்றது.

இச்சிறு தவளைகள் காலக்கிரமத்தில் விருத்தியாகிப் பூர்ண வளர்ச்சி யடைகின்றன. இக்குஞ்சுகள் பிறந்த சில வார காலங்களில், இவ் வாலுள்ள தவளைகளின் பின்புறத்தில், வாலின் அடிபுறத்தில், தவளைகளுக்குப் பின்னங் கால்கள் இரண்டு உண்டாகின்றன. அதே சமயத்தில் இத் தவளைகளுக்கு முன்னங்கால்களும் உண்டாகின்றன. முன்னங்கால்கள் தவளைகளின் காதுபோன்ற உறுப்புகளில் உண்டாகி ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து வளர்ந்து வெளிவந்து விடுகின்றன. அப்போது பின்னங்கால்கள் வளைந்து தவளைக் கிருப்பனபோல் மாறிவிடுகின்றன. இக்

கால்கள் யாவும் நாளா வர்த்தியில் பருமனாய் வளர்ந்து நீண்டு விடும். இப்படி நாலு கால்களும் வளர்ந்துவந்த பிறகு, தவளைகள் வாலுடன்கூடி விளங்கும். பின்னர் தவளைகளின் பின்வால்கள் விழுந்துவிட ஆரம்பிக்கும். நாலுகால்கள் விழுந்த நாலு நாட்கள் கழித்து வால்கள் குறைய ஆரம்பித்து, அவை மறைந்தும் வரும்

தேரைகளுக்கும் தவளைகளுக்கும் கால்களில் மொத்தம் ஐந்து விரல்கள் உள்ளன. சில தவளைகளுக்குக் கால்களின் விரல்களில் மாக்கிளைகள்போலும் நகங்கள் உள்ளன. விரல்களின் அடியில் வலைபோலும் பின்னல் பாகங்கள் சில தவளைகளுக்குண்டு.

இப்போது குளத்திலுண்டான சிறிய தவளைக் குஞ்சுகள் ஜலத்தில் அங்குமிங்கும் ஓடி, நீர்க்கரைகளிலுள்ள புல்தரைப் பூச்சிகள் எவற்றையும் பற்றியுண்ணும். வெயிற்காலத்திலுண்டான மழையின் மிகுதியினால், இம்மாதிரியான இத்தவளைகளின் கோடானு கோடி சங்கியை குளத்திலுண்டாகக் காணலாம்.

(இன்னும் வரும்)

## வர்த்தமானக் குறிப்புகள்.

1. இந்திய வெள்ளைக்கண் பறவை:—கல்கத்தாவில் பறவைகள் விற்கும் சந்தை எப்போதும் கூடுவது வழக்கம். அங்கு விதவிதமான பறவைகள் விற்பதைப் பறவைகளிற் பிரியமுள்ளோர், பலவித காரியங்களுக்காக அவற்றை விலைகொடுத்து வாங்கிப் போவார்கள். தீர்த்த பஜாரில் (Tiretta Bazaar) கூடும் சந்தையில் இந்தியன் ஒயிட் ஐ என்ற பட்சி விலைக்கு அடிக்கடி கொண்டுவரப்படுகின்றன. இந்தப் பட்சி சாதாரணமான தூக்கணாங் குருவியில் முக்கால் பங்கு உருவுள்ளது. இது இந்தியாவில் அகப்பட்டுக் கூண்டில் வைத்து வளர்க்கிறார்களாயின் இதற்கு இங்கிலீஷ்ப் பெயராகிய இந்தியன் ஒயிட் ஐ என்ற பெயர் தவிர வேறு தமிழ்த் தேசப்பெயரோ தெலுங்கு, மலையாள தேசப் பெயரோ வங்காளிப் பெயர்களோ இல்லை. பட்சியின் மேற்பாகம் சிறிய பச்சை கலந்த பொன்போன்ற மஞ்சள் வர்ண முடையது. சாம்பல் வர்ணமுள்ள வெள்ளை நிறம் பட்சியின் அடிப்புறமாகும். மூக்கிலும் தொண்டையிலும் பிரகாசமான மஞ்சள் நிறம் பொருந்தியதாம். வாலின் புறத்தில் மஞ்சள் கோடொன்றுண்டு. அதன் கண்ணைச் சுற்றி வளையம்போன்ற வெள்ளை இறகுகளிருப்பதுபற்றி இந்தியன் ஒயிட் ஐ என்ற இங்கிலீஷ்ப் பெயரைப் பெற்றது. பல வேளைகளில், முகக் கண்ணாடி யணிந்த பறவை (Spectacle bird) என்றும் இதனைப் பெயரிட்டழைப்பது முண்டு

இப்பட்சிகள் பழத் தோட்டங்களிற் புகுந்து, அவற்றை யழித்துவிடுவதில் மிகுந்தும் பெயரெடுத்திருக்கிறதாம். மாம்பழத் தோட்டங்கள், கொய்யா மரங்கள் நிறைந்த தோட்டங்களில் இப்பட்சிகள் ஏராளமாய்ப் புகுந்து கொள்ளையிடும் சுபாவ முடையன. இப்பட்சிகளைப் பிடித்துக் கூண்டிலடைத்த போது, வாழைப்பழங்களிட்டு வளர்க்கிறார்கள். முதிர்ந்த பழங்களை இப்பட்சி கொத்திப் பட்சிப்பதில் பிரியம் காட்டுவதுடன் நில்லாது, பழத்தோட்டங்களில் பழமரங்களில் அடிக்கடி உற்பத்தியாகும் பூச்சி புழுக்களைக்கண்டு கொத்திக் கொன்று, வருஷ வாரியில் பழத்தோட்டக் காரர்களுக்குப் பல வேளைகளில் நன்மையு முண்டுபண்ணி வருவதால் இப்பட்சி சமூகம் நாசமாக்கப்படாது விருத்தியம்சத்திற்குக் கொண்டுவரத் தோட்டக்காரர்கள் முயலவேண்டும். ஆகவே, பழமரத்தோட்ட வளர்ப்பில், வியாபாரதோரணையில் வேலைசெய்யும் விவசாயிகள், தம் தோட்டங்களில் மரங்களில் வளரும் பூச்சிகளை வேறு விதமான மருந்து வகைகளினால் கொல்லுவதைக் காட்டிலும், இப்பட்சிகளினால் கொல்லவேண்டி இந்தியாவின் சில பாகங்களில் இப்பட்சிகளைப் பிடித்துக் கூண்டிலடைத்து வளர்த்துப் பழக்கி வேண்டிய போது, தம் தோட்டங்களில் விட்டு, அம்மரங்களைப் பூச்சிப் புழுக்கள் பிடிக்காது காப்பாற்றி பழ வியாபாரங்களில் இலாபமடைகிறார்கள். இப்பட்சிகள் கூண்டில் அடைபட்டிருக்கையில் ரொட்டித் துண்டுகள், பால், மெல்லியதான பழங்கள், சிறிய புழுக்கள் முதலியவைகளைக் கொடுக்கத் தின்று விருத்தியடைந்துத் தம்மை வளர்ப்போருக்கு மிக்க பிரயோசனம் தருவதாகின்றன. ஆகையால், பழத்தோட்டக்காரர்கள் இப்பட்சிகளைப்பிடித்து வளர்ப்பதில் கருணை காட்டுகிறார்கள் என்று இந்தியன் விவசாயப் பத்திரிகை கூறுகிறது.



2. திமிங்கிலத்தை விழுங்கும் ஷார்க்கு என்னும் மச்சம்:—திமிங்கலம் என்ற மச்சம உத்தர துருவத்தில் வசிக்கும் பெரிய மச்சம். மச்சத்தின் தேகத்தி னுட்புறத்தில் ஒரு மனிதன் துரகாரூடனாய்ச் செல்லலாமென்றால், திமிங்கிலத்தின் பெருமை இப்படிப்பட்டதென்று எளிதில் அறியலாம். இப்படிப்பட்ட பெரிய பிராணியை மிகவும் சிறிய பிராணியான ஷார்க்கு என்னும் சிறிய மீன் விழுங்கும்படியான தன்மையில் பெருத்திருந்ததாம். திமிங்கிலத்தை விழுங்கும்படியான ஷார்க்கு என்னும் மீன்கள் அநேககோடி வருஷங்களின் முன்னால் பிளோரிடா என்னும் தீபகல்பத்தினைச் சுற்றிய கடலோரத்தில் சஞ்சரித்து வந்ததாம். இந்த பெரிய ஷார்க்கென்னும் மீனின் மோவாய்க் கட்டையின் எலும்புகள், இப்போது நியூயார்க்கு நகரத்தின் பொருட்காட்சி சாலையில் இயற்கை விநோதச் சரித்திரப்பகுதியில் எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. கடலில் அக்காலத்தில் வசித்த பிராணிகளின் எலும்புக்கூடுகளை ஆராய்ந்து பார்த்ததில் இந்த ஷார்க்கு என்னும் பெரியமீன் 90 அடியும் அதற்கு மேலும் நீளமுள்ளனவாய் வளர்ந்திருந்தனவாகத் தெரிகிறது. தற்காலத்தில் உஷ்ணமண்டல சமுத்திரங்களில் வசிக்கும் மீன்கள் இப்போது 40 அடிக்குமேல் கூட வளருவதில்லை.

---

3. வழுக்கைத் தலையை மயிர்த்தலை யாக்குவ தெப்படி? — மயிர்த்தலைகள், தலைகளில் நேரிட்ட புழு வெட்டுகளினாலும், நோய்களினாலும் சலவைக்கல்போல் வழுக்கைத் தலைகளாக மாறிவிடுவதை நாம் நாளும் பார்த்திருக்கிறோம் இத் தலைகளை மயிர்த்தலைகளாக்க, வெளவால் எண்ணெய் போன்ற அபூர்வ மருந்துகள் உபயோகத்திலிருக்கின்றன. இதற்காக சீமான்களும் சீமாட்டிகளும் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கிறார்கள்.

டிபேட், சைபீரியா, நார்வே முதலிய மலைப்பிரதேசங்களில் முறையே ஜனனமாகி வளர்ந்து வருகிற, யாக் என்ற சடை எருமையும், மான்களும், பசுக்களும் தம் மயிர்களுக்காகப் பேர் போனவை. இந்தக் குளிர்ப் பிரதேசங்களில் தங்கள் தேகத்தைக் காப்பாற்றிக்கொண்டு விருத்தியடையும்படி பகவான் அவைகளுடைய தேகத்தில் நெருங்கிய மயிர்களைக் கொடுத்திருக்கிறார். அப்படியான மயிர்கள் மட்டும், இல்லாதுபோனால், மேற்கூறிய பிராணிகளின் உயிர் நிலைத்திராமல், அவைகள் போன இடம் புல்முளைத்தே போயிருக்கும் ஆகவே, குளிர்ச்சியான பூமிக்கும், தேகத்தில் மயிர் முளைப்பதற்கும் விசேஷ சம்பந்தமுண்டென்று கொள்ளவேண்டியிருக்கிறது. லிவர்பூல் பட்டணத்தில், குளிர்ச்சியான செடிகள் நிறைந்த விடத்தில் வசிக்கும் எலிகள் அடர்த்தியான மயிர்களைத் தேகத்தில் உடையனவாகக் காணப்பட்டன. அங்குள்ள எலிகளைக் கொல்ல, அவ்விடத்தில் பூனைகளை வளர்த்து வந்தார்கள். அப்பூனைகள் அக்குளிர்ச்சியான இடத்தில் வளர, அவற்றின் தேகங்களில், எலிகளைப்போல நீண்ட மயிர்கள் வளர்ந்திருந்தன. இன்னும் அம்மயிர்கள் அழகாயும், மெல்லியதாயும் வளர்ந்திருந்தன. ஆகவே, மிருகங்களின் மயிர்கள், அவைகளின் சருமங்களின்மேல் படும் குளிர்ச்சிக்குத் தகுந்தாற்போல், வளருகின்றன என்பது பெறப்படுகின்றது.

ஆகவே, மயிரை வளர்ப்பதற்குக் குளிர்ச்சியை ஏன் உபயோகிக்கக்கூடாது என்று கேள்வி பிறந்து, இதற்கேற்றச் சோதனைகளும் செய்துவருகிறார்கள். அநேக கண்டப் பிரதேசங்களிலுள்ள வைத்தியர்களும் மனிதர்களின் வழுக்கைத் தலைகளிலும், இதே மாதிரி சோதனையினால் ஏன் மயிரை வளரச் செய்யக்கூடாதென்று இப்போது பரிசோதனைசெய்து பார்த்து வருகிறார்கள்.

குளிர்ச்சியான பிரதேசத்தில் வளர்க்கப்பெறும் பூனைக்கு மயிர் குளிர்தாக்காததினால், விசேஷமாய் மயிர் உண்டாகுமானால், ஏன் மனிதரின் வழுக்கைத் தலைகளின், இதே மாதிரி முறையை யனுஷ்டானஞ் செய்ய, மயிர் முளைக்கக் கூடாதென்பதே கேள்வி.

---

4. வெளவாலைப்பற்றிய பழமொழிகள்:— (1) வெளவால் தலை நரித்தலைபோல. (2) வெளவால் வீட்டுக்கு வெளவால் வந்தால் நீயொரு கொம்பிலே நானொரு கொம்பிலே (3) வெளவாலுக்கு நீளவும் தெரியும் குறுகவும் தெரியும். (4) வெளவால்தின்னாத பழமில்லை. (5) வெளவால் அடித்துத் தின்னும். அணில் கடித்துத் தின்னும் (6) வெளவால் தொங்குவதுபோல (7) வெளவால்போல பட்சியைச் சேர்ந்தது

மல்ல, மிருக ஜாதியைச் சேர்ந்ததுமல்ல. (8) வௌவால்போல இரண்டிலும் கெட்டான் ஜாதி.

வௌவால்: பழந்தின்னி வௌவால், இரத்தமுறிஞ்சி வௌவால், சாதாரணவௌவால் என்று மூவகைத்து. பழந்தின்னி வௌவால் நல்ல ஸாரமுள்ள பழங்களைத் தின்று கொழுத்திருக்கும். இப்பழந்தின்னி வௌவாலைப் பிடித்துத் தின்னும் மனிதர்களும் உண்டு. இப்பழந்தின்னி வௌவாலைப் பிடித்து அடித்து இதன் இரத்தத்தில் நல்லெண்ணெயும் இன்னும் சில கடைச்சரக்குகளையும் சேர்த்து வழுக்கைத்தலைக்குத்தடவ அந்தலையில் கறுத்த மயிர் முளைக்கும். இந்த எண்ணெய்க் கைத்தொழிலைப் பூர்வீகர்கள் கையாண்டு வந்தார்கள். மேனாடுகளினின்றும் வேறு மயிர்மிளுக் கெண்ணெய்கள் நம் நாட்டில் ஏராளமாய் இறக்குமதியாகவும் நம் நாட்டில் இக் கைத்தொழிலை ஆதரிப்பார் குறைந்தும் பழந்தின்னி வௌவாலினின்றும் தயார் செய்யப்படும் எண்ணெய்க் கைத்தொழில் நசித்துப் போய்விட்டது.

இருளடர்ந்த கோயில்களில் தொங்கும் வௌவால்களின் புழுக்கைகள் சேர்க்கப்பட்டுச் சிலவிடங்களில் பூச்செடிகளின் உரமாக விற்கப்படுகின்றன.

197921

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—B. 19451

## HOW TO STOP CRUELTY

When a person witnesses an act of cruelty there are two courses of procedure open. Either the humane sympathizer can directly command the offender to desist, or can ask police interference when an officer can be found. The first step should be to explain and reason, where such a course is possible, with the offender. There are few persons who have no spark of kindness in their breasts. A reasonable appeal for humanity usually meets with success.

Most cruelty is the result of passion, a wrong training or heedlessness. It is usually better to convince persons that their course is wrong and unjustifiable than to seek to terrorize them by immediate appeal to the law and the threat of severe punishment. If a remonstrance is made in a kindly and friendly spirit it will commonly win prompt compliance and secure relief. We believe that it is better to win a culprit's humane conversion, than to secure severe punishment.

# Convictions for the Year 1922.

This return is published to inform the public of the nature and extent of acts of cruelty to animals discovered by the Society in the City of Madras.

The following **CONVICTIONS** for cruelty to animals were obtained in Madras during the first three months of the year 1922 by the Society's Agency:—

| | | |
|---|---|---|
| 1. | Working Horses in an unfit state ... ... ... | 60 |
| 2. | Do. Ponies do. ... ... ... ... | 418 |
| 3. | Do. Bullocks do. ... .. ... ... | 1,758 |
| 4. | Do. Buffaloes do ... ... ... ... | 2 |
| 5. | Do. Mules do ... ... | ... |
| 6. | Cows ill-treated ... ... ... ... ... ... | ... |
| 7. | Calves do. ... ... ... ... | 29 |
| 8. | Fowls do. ... ... ... .. ... ... | 3 |
| 9. | Donkeys do. ... ... ... ... ... ... | ... |
| 10 | Goading Bulls ... ... ... ... ... ... | ... |
| 11 | Overloading ... ... ... ... ... | ... |
| 12. | Owners causing cruelty ... ... ... ... | 56 |
| | **Total** ... | 2,326 |

## 1922-ஹு முதல் மூன்று மாசங்களில் ஜீவ ஹிம்ஸைக்காகச் செய்த தண்டனைகளின் பட்டி.

அடியில் குறித்த ஜீவ ஹிம்ஸையான குற்றங்கள் 1922-ஹுத்தில் இந்தச் சங்கத்தாரால் கண்டறியப்பட்டுத் தண்டிக்கப்பட்டன:—

| | | |
|---|---|---|
| 1. | உழைக்கச் சக்தியில்லாமல் நோயாளியாயிருந்த குதிரைகளை வருத்தி வேலை வாங்கினதற்காகத் தண்டித்த குற்றம் .... .... .... | 60 |
| 2. | ,, குதிரைமட்டங்களை ,, .... | 418 |
| 3. | ,, எருதுகளை ,, .... | 1,758 |
| 4. | ,, எருமைக் கிடாக்களை ,, .... | 2 |
| 5. | ,, கோவேறு கழுதையை ,, .... | .... |
| 6. | பசுக்களைத் துன்பப்படுத்திய குற்றம் .... .... .... .... | .... |
| 7. | கன்றுக் குட்டிகளைத் துன்பப்படுத்திய குற்றம் .... .... .... | 29 |
| 8. | கோழிகளை ,, .... .... .... .... | 3 |
| 9. | கழுதைகளை ,, .... .... .... .... | .... |
| 10. | எருதுகளை தாற்றுக்கோலால் தூண்டினது .... .... .... | .... |
| 11. | அதிக பாரத்தை எற்றியது .... .... .... .... | .... |
| 12 | சொந்தக்காரர்களே செய்த மேற்குறித்த குற்றங்கள் .... .... | 56 |
| | மொத்தம் .... | 2,326 |

**இந்தச் சங்கத்தின் காரியங்கள் அவரவர்கள் இஷ்டப்பட்டுக் கொடுக்கும் உபகாரப் பொருளாலேயே நடத்தப்படுகின்றன.**

The Society is supported only by **Voluntary Contributions.**